# செய்தி மற்றும் விளம்பரம்

## கொள்கை விளக்கக் குறிப்பு : 2012 – 2013

“எனது அரசு தூய்மையான வெளிப்படையான திறமையான மற்றும் பொறுப்பான நிருவாகம் செய்யத் தீர்மானித்து அதையே செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதே எனது கனவாகும்.”

– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்



**“எல்லாரும், எல்லாமும் பெற்று, வாழ்வில் வளம் பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும். இவ்வாறான மக்களாட்சியில் தான், ஏழைகளும், வசதி படைத்தோருக்கு இணையான வசதிகளைப் பெற இயலும்.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## முன்னுரை

அரசின் செயல்பாடுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசுத் திட்டங்களின்பால் மக்களிடம் ஈடுபாட்டை உருவாக்கி அத்திட்டங்களின் பயன்கள் மக்களிடம் முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்வதே செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணி ஆகும்.

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு”**

என்னும் குறள் வழி, தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட பேரன்பால் தமிழ் இனம் மேம்படவும் தமிழ் மக்கள் வாழ்ந்திடவும் தம்மையே அர்ப்பணித்து, தமிழ் வளம் பெறவும் தமிழ் மக்கள் நலம் பெறவும் தமது சிந்தனைத்திறனை, செயலாற்றலை நேர்ந்தளித்து, தமிழகத்தின் மேம்பாட்டுக்கென அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக



முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது தலைமையில் இயங்கிடும் தமிழக அரசின் செவியாய், விழியாய்ச் செயல்பட்டு, அரசின் கொள்கைகளை, கோட்பாடுகளை, ஆற்றுகின்ற அரும்பணிகளை, வழங்குகின்ற நலத்திட்ட உதவிகளைப் பற்றி மக்கள் அனைவரும் அறியச் செய்வதும் அரசுக்கும் மக்களுக்கும் இடையே நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்த்து, வெளிப்படையான நிருவாகம் மேலோங்க வழி வகுப்பதும் செய்தித்துறை ஆகும்.

அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், அத்திட்டங்களால் விளையும் பயன்கள் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி விளம்பரப் பணிகளை மேற்கொள்ளவும் செய்தி மக்கள் தொடர்புத்துறை சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது.

## செய்தித்துறையின் சீர்மிகு பணிகள்

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்களை, அரசு வெளியிடுகின்ற அறிவிப்புகளை ஊடகங்கள் முதலான மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக மக்களிடம் சேர்த்தல்

- பொருட்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் வாயிலாக அரசின் திட்டங்களைக் கண்ணுக்கும் கருத்துக்கும் சுவையூட்டும் காட்சிகளாய் விரியச்செய்து மக்களை உணரச் செய்தல்

- வளர்ச்சிப் பணிகளுக்கான விளம்பரங்களை வரைகலை வடிவாய் வெளியிட்டு முன்னோடித் திட்டங்களையும் சாதனைகளையும் மக்கள் அறிந்து கொள்ள வழி வகுத்தல்

- அரசின் சாதனைகளையும் அரும் பணிகளையும் அச்சு வடிவாக்கி அவற்றை அரசின் பருவ இதழ்களாய், சிறப்பு வெளியீடுகளாய் வெளிவரச்செய்தல்

- சீரிய விழாக்கள் மூலம் விடுதலைப் போராட்ட தியாகிகள், தமிழ்ச் சான்றோர் மற்றும் நாட்டுக்கு உழைத்த நல்லோரின் நினைவைப் போற்றி வணங்குதல்

- வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர் வாழ்ந்த இல்லங்களைப் பராமரித்து அவர்தம் நினைவாக நினைவுச் சின்னங்கள் உருவாக்கி அப்பெருமை மிகு தலைவர்களின் அருமை பெருமைகளை இளைய தலைமுறையினரும் பின்பற்றிட வழிவகுத்தல்



- ஒளி – ஒலி ஊடகங்கள் வழியாக மக்கள் நெஞ்சங்களை ஊடுருவ “செய்தி மலர்கள்” தயாரித்து, கிராமங்களிலும் திரையரங்குகளிலும் திரையிடுதல்

- திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பக் கலைகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து, நாளைய திரைக்கலைஞர்களை உருவாக்குதல்

என ஆக்கப்பூர்வமான பணிகள் பல செய்து, செயலாற்றும் பணிகளை வளர்ந்து வரும் தொழில்நுட்ப உத்திகளுடன் மேம்படுத்தி, குக்கிராமங்களில் வாழ்கின்ற ஏழை எளியோரும் தலைமைச் செயலகத்துடன் நேரடித் தொடர்பில் இருக்கும் உணர்வை உருவாக்கிச் செம்மையுறப் பணியாற்றி வருகிறது செய்தி மக்கள் தொடர்புத்துறை.

**“அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.”**

என்னும் திருவள்ளுவரின் திருவாக்கின்படி நம்மால் முடியுமா என்று ஒருபோதும் தளர்ச்சி கொள்ளாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே நமக்கு வெற்றியைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பதை இத்துறை மனதில் கொண்டு, தமிழக மக்களின் நலன் கருதி ஏழை எளிய மக்கள்

பொருளாதார முன்னேற்றம் காண, சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்புகள், கொள்கைகள், திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை மக்களிடம் எடுத்துச் செல்லும் சீரிய பணியைத் தொடர்ந்து தொய்வின்றி இத்துறை செய்து வருகிறது.



**"நிருவாகம் மற்றும் மேம்பாடு தொடர்பாக அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதே எப்போதும் என்னுடைய நோக்கமாகும்."**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு 365 நாட்களும் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் ஒரு முக்கியப் பிரிவாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், அறிவிப்புகள், நலத்திட்டங்கள், ஆக்கப்பணிகள், அரசின் சாதனைகள் குறித்த செய்திகள், அரசு சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் விவரங்கள், அதன் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்கள் ஆகியவற்றை நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள் மற்றும் இணையதளச் செய்தி நிறுவனங்கள் என ஏறத்தாழ 200 ஊடகங்களுக்கு நிகரி மற்றும் மின் அஞ்சல் மூலமாக அனுப்பி, மக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளச் செய்யும் பணியினைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு செவ்வனே செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களால் நடத்தப்பெறும் செய்தியாளர் கூட்டங்களுக்கு உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது. மேலும் அரசின் முக்கிய அறிவிப்புகளையும் செய்தி வெளியீடுகளையும் மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்கள் வெளியிடும் வகையில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அனைத்து அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொள்ளும் விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றிற்குப் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியினர் செய்தி சேகரிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு விழாக்கள், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்கள், புகைப்படங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் தலைமையிடத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் இடம் பெறச்செய்யவும் மற்றும் வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி/ ஒளிபரப்பச் செய்யவும் இப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



## பத்திரிகையாளர் நலன்

### பத்திரிகையாளர் ஓய்வூதியம்

இத்திட்டம் 1986 ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி, பணியிலிருந்து ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.5,000/– வழங்கப்பட்டது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பத்திரிகையாளர் நலனைக் கருத்தில் கொண்டு இந்த ஓய்வூதியத்தொகையை ரூ.6000 ஆக உயர்த்தி வழங்க அறிவுறுத்தியபடி, 14.09.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, உயர்த்தப்பட்ட பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.** கடந்த நிதியாண்டில் (2011–2012) ரூ.45.00 இலட்சம் ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டு, இதுவரை 109 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளரின் மனைவிக்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.2,500/– ஏற்கனவே வழங்கப்பட்டு வந்தது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு இதனை ரூ.3000 ஆக உயர்த்தி வழங்க அறிவுறுத்தியபடி, 14.09.2011 அன்று அரசாணை**

**வெளியிடப்பட்டு, உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.** இதுவரை மறைந்த 25 பத்திரிகையாளர்களின் மனைவிகளுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நிதி ஆண்டில் (2011 – 2012) ரூபாய் 5.40 இலட்சம் குடும்ப ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டது.

## பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் ஆகியோர் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டு வருகிறது :

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 50,000/– |
| 10 | ரூ. 1,00,000/– |
| 15 | ரூ. 1,50,000/– |
| 20 | ரூ. 2,00,000/– |

இதுவரை 46 மறைந்த பத்திரிகையாளர் குடும்பத்தினர் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றுள்ளனர்.



## பத்திரிகையாளர் நல நிதியம்

பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூபாய் ஒரு கோடி நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூ.83,333/– கிடைக்கிறது. கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பணியிலிருக்கும் பத்திரிகையாளர்களுக்கு இந்த வட்டித் தொகையிலிருந்து அதிகபட்சமாக ரூ.50,000/– வரை மருத்துவ நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகம் முழுவதும் 367 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 785 பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## செய்தியாளர் அங்கீகார அட்டை

அரசு அமைத்துள்ள ‘‘செய்தியாளர் அங்கீகாரக் குழு’’வின் பரிந்துரையின் பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள்/ தொலைக்காட்சிகள்/ செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு, செய்தியாளர் அங்கீகார அட்டை (Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரையின்பேரில் பத்திரிகையாளர்களுக்குச் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## செய்தியாளர் அட்டை

காலமுறை இதழ்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு, ‘‘செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழு’’வின் பரிந்துரையின் பேரில் செய்தியாளர் அட்டைகள் (Press pass) வழங்கப்பட்டு வருகின்றன.



## செய்தியாளர் இலவசப் பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப் பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு வசதியாக அரசுப் பேருந்துகளில் பயணிக்க ஓராண்டு காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் இலவசப் பேருந்துப் பயண அட்டை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஓராண்டுக்குச் சுமார் ரூபாய் 55.00 இலட்சம் தொகையைப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறை ஈடுசெய்கிறது.

## இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்ட விவரம்

| வ. எண் | அடையாள அட்டைகளின் பெயர் | சென்னை | மாவட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | செய்தியாளர் அங்கீகார அட்டை | 863 | 113 | 976 |
| 2 | செய்தியாளர் அடையாள அட்டை | 244 | 689 | 933 |
| 3 | இலவசப் பேருந்துப் பயண அட்டை | 434 | 1531 | 1965 |

## செய்தி முகமைகள்

பிடிஐ (Press Trust of India) மற்றும் யுஎன்ஐ (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் இடங்களில் கணினி மூலம் 24 மணிநேரமும் ஆண்டு முழுவதும் பெறப்படுகிறது :

(அ) மேதகு ஆளுநர் மாளிகை
(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லம்
(இ) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

## புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர் அறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தியாளர் அறை 25 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 3.8.2011 அன்று திறந்து வைத்தார்கள்.





## விழா நிகழ்வுகளை இணைய வசதி மூலம் அனுப்புதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு விழாக்களின் நிகழ்வுகளைத் தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து இணைய வசதியில் அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்க ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மென்பொருள் வசதி (Online Media Exchange and Supply Chain Management Solution) ஏற்படுத்த ஆணையிட்டவாறு அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தலைமைச் செயலகத்தில் ஊடக மையம்

தலைமைச் செயலகத்திற்கு வருகை தருகின்ற பல்வேறு ஊடகங்களிலிருந்து வரும் செய்தியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் தங்களது நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு ஏதுவாக "ஊடக மையம்" அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு ரூ.31 இலட்சம் மதிப்பீட்டில் ஊடக மையம் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**“மக்களுடைய எதிர்பார்ப்புகளே இந்த அரசின் உந்து சக்தியாகச் செயல்படுகிறது.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## புகைப்படப் பிரிவு

புகைப்படப் பிரிவில் புதிய வகை டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு, தலைமைச் செயலகத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணையதள வசதியுடன் கூடிய 3 மடிக்கணினிகள் மூலம் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டிலும் பதிவு செய்யப்பட்டு அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இப்பிரிவிலுள்ள 75,000 அரிய புகைப்பட நெகட்டிவ் படச்சுருள்களைப் பாதுகாத்து வரிசைப்படுத்தி, தலைப்பிட்டு அவற்றை மின்னணு முறையில்



மாற்றும் பணி (Digital Scanning) ரூ.13.25 இலட்சம் செலவில் நிறைவடைந்துள்ளது. மேலும் 1,50,000 நெகட்டிவ் படச்சுருள்கள் மற்றும் 10,000 கருப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மின்னணு முறையில் மாற்றும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத்தின் நுழைவாயிலில் ரூ.14 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்ட புகைப்பட மாடம் 06.01.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தினந்தோறும் சுமார் 2,500 பொதுமக்கள் புகைப்படங்களை கண்டுகளிக்கின்றனர்.



செய்தி மற்றும் விளம்பரத் துறை மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 30 நவீன தொழில் நுட்பப் புகைப்படக்கருவிகள் (High End Digital Cameras) ரூ.89,85,000/– செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2011–2012 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் தலைமை இடத்திற்கு ஒன்பது எண்ணிக்கைகள் கேனான் டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் (Canon Digital Still Cameras) ரூ.22,50,000/– செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.



**"தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிபெற்ற ஒரு முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என்னுடைய குறிக்கோள் அல்லது கனவாகும். அதனைச் செயல்படுத்துகின்ற போது கனவுகள் உண்மையாகும். முறையாகத் திட்டமிடப்பட்டால் அதுவே பாதி இலக்கை அடைந்தது போல் ஆகும்."**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## மேற்கோள் பிரிவு

பத்திரிகைச் செய்திகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் பணியினைத் தலைமையிடத்தில் உள்ள மேற்கோள் பிரிவு செவ்வனே செய்து வருகிறது.

இப்பிரிவில் நாள்தோறும் வெளிவரும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பும் பணி நடைபெறுகிறது. மேலும், காலை நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நடவடிக்கைக்கும் தொகுத்து அனுப்பும் பணியும்

மேற்கொள்ளப்படுகிறது. முக்கியமான தமிழ், ஆங்கில நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும், இவை தேவைப்படும்போது மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள், துறைச்செயலாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

காலச்சுவடுகளின் தொகுப்பாக விளங்கும் பழைய நாளிதழ்களை நவீன மின்னணு முறையில் எண்மியப்படுத்திப் (Digitalization) பராமரிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு, மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களில் இடம்பெற்ற முக்கியச் செய்திகளைப் பாதுகாத்திடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், பேட்டிகள், அரசின் சாதனைகள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், அரசாணைகள், நாளிதழ்களின் தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் போன்ற தனித்தனித் தலைப்புகளில் செய்திகளைத் தொகுத்துப் பராமரித்திடவும் ரூ.75 இலட்சம் செலவில் மின்னணு முறையில் எண்மியப்படுத்தும் (Digitalization) பணிகளுக்காக அரசாணை வெளியிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**“நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும் சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் “பெருமைப்படுத்த வேண்டியதும் அவர்களது பெருமைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## நினைவகங்கள்

நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தன்னுயிரைத் துச்சமென மதித்து, தியாகங்கள் பல புரிந்த தியாகச் செம்மல்களையும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் வாழ்க்கையையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்களையும் இளைய சமுதாயத்தினர் என்றென்றும் நெஞ்சில் நிறுத்திப் போற்றி, இலட்சியப்பாதையில் தங்களைப் ஈடுபடுத்திக் கொள்ளத் தூண்டும் வகையில் அவர்களின் நினைவாக 52 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் 1 நினைவுப் பூங்கா ஆகியன செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## நினைவகங்கள்

| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராசர் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 6 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கம் பெருமாள்கோயில் தெரு திருவல்லிக்கேணி, சென்னை |
| 7 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |



| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 8 | பெருந்தலைவர் காமராசர் நினைவில்லம் | திருமலை சாலை, தியாகராயநகர் சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர்த் தியாகிகள் மணி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 11 | தியாகிகள் மணி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணி மண்டபம் | காயிதேமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில், சென்னை |
| 14 | பேரறிஞர் அண்ணா நினைவில்லம் | சின்னக் காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 15 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 16 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணி மண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 17 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம் கேரள மாநிலம் |
| 18 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 19 | தீரன் சின்னமலை மணி மண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 20 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 21 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 22 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவில்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 23 | வ.வே.சுப்பிரமணியம் நினைவில்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 24 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணி மண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |



| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 25 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 26 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவில்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 27 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 28 | கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 29 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 30 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 31 | தியாக சீலர் கக்கன் மணி மண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 32 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவில்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 33 | பரிதிமாற் கலைஞர் நினைவில்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |

| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 34 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 35 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 36 | பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு மணி மண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 37 | மகாகவி பாரதியார் மணி மண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 38 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 39 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 40 | வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 41 | சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |



| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 42 | சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 43 | உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 44 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணி மண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 45 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 46 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவில்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 47 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணி மண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 48 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 49 | பெருந்தலைவர் காமராசர் மணி மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 50 | சதாவதானி செய்குத்தம்பி நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டார், பாவலர் கன்னியாகுமரி மாவட்டம் |
| 51 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 52 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |

## ஆ. அரங்கங்கள்

| வ. எண் | அரங்கங்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை மாவட்டம் |
| 2 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 3 | மகாமகம் கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |



## இ. நினைவுத்தூண்கள்

| வ. எண் | நினைவுத்தூண்கள் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை மாவட்டம் |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராசர் சாலை, சென்னை மாவட்டம் |
| 3 | குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராசர் சாலை சென்னை மாவட்டம் |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழா நினைவுத்தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

**ஈ. நினைவுப்பூங்கா**

| | | |
|---|---|---|
| 1 | வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |

**கட்டப்பட்டு வரும் மணிமண்டபங்கள்**

| வ. எண் | மணிமண்டபம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தமிழிசை மூவர் மணிமண்டபம் சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம் | ரூ.1.51 கோடி | கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. விரைவில் பணிகள் முடிக்கப்படும் |
| 2 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் | ரூ.50.00 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்படும் |
| 3 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் விருப்பாச்சி திண்டுக்கல் மாவட்டம் | ரூ.69.00 இலட்சம் | கட்டுமானப் பணிகள் முடிந்து சிலையமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் பணி முடிக்கப்படும் |
| 4 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம் பாளையங்கோட்டை திருநெல்வேலி மாவட்டம் | ரூ.49.00 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்படும் |



| வ. எண் | மணிமண்டபம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 5 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம், ஓமந்தூர் விழுப்புரம் மாவட்டம் | ரூ.69.00 இலட்சம் | கட்டுமானப் பணிகள் முடிந்து, பூங்கா அமைக்கும் பணி நடைபெறுகிறது விரைவில் பணி முடிக்கப்படும் |
| 6 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம், பட்டுக்கோட்டை தஞ்சாவூர் மாவட்டம் | ரூ.58.00 இலட்சம் | பொதுப்பணித்துறை மூலம் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |
| 7 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் நாகர்கோயில் கன்னியாகுமரி மாவட்டம் | ரூ.48.70 இலட்சம் | பொதுப்பணித்துறை மூலம் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |

**நடைபெற்று வரும் பணிகள்**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளவாறு சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்கள் புதுப்பொலிவுடன் திகழ ரூ.8.90 கோடி செலவில் ஆணை வெளியிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- 12.09.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும் சென்னையில் மணிமண்டபங்கள் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது அறிவித்துள்ளவாறும்,** 12.09.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறும் **கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி மாவட்டம் தமிழ் நாட்டோடு இணைய, போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு, களியக்காவிளையில் திருவுருவச்சிலை** அமைத்திட ஆணை வெளியிடப்பட்டுச் சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



- தாய்மொழி தமிழுக்காகத் தன் உயிரையும் துச்சமென மதித்து இந்தியை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த மொழிப்போர் தியாகி கீழப்பழூர் சின்னச்சாமி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைத்திட ஆணை வெளியிடப்பட்டு சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 2011–2012ஆம் ஆண்டிற்கான, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, கும்பகோணத்தில் அமைந்துள்ள மகாமகம் கலையரங்கம் ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குப் பயன்பாட்டிற்காக மேம்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- 2011–2012ஆம் ஆண்டிற்கான, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, நினைவகங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பைக் கருத்தில் கொண்டு, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மகாமகம் கலையரங்கத்திற்கும் புதியதாக அமைக்கப்பட்டு வரும் 8 (எட்டு) மணிமண்டபங்களுக்கும் பணியிடங்கள் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழகத்தில் உள்ள அனைத்து நினைவகங்களிலும் பார்வையிட வரும் மாற்றுத் திறனாளிகள் எளிதாகச் சென்றுவர ஏதுவாகச் சாய்தளங்கள் அமைத்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு ரூபாய் 39.56 லட்சம் மதிப்பீட்டில் சாய்தளங்கள் அமைத்திட அரசாணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- பேரறிஞர் அண்ணா, பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கூடுதல் பாதுகாவலர்கள் நியமித்திடவும், நினைவிடங்களையும் அதன் வளாகங்களையும் கண்காணிக்கும் வகையில் ரூபாய் 11.91 லட்சம் மதிப்பீட்டில் CCTV கேமராக்கள் பொருத்தப்படவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டவாறு அரசாணைகள் வெளியிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**"இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழகம். வன்முறைகளுக்கு இடம் கொடாமல், அஹிம்சை மூலமே அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வலம் வந்த இடம் என்ற பெருமையும் பெற்றது நம் தமிழகம்."**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவர்களையும் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திடவும் அவர்களது தியாகங்களையும் பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடு அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினத்தில், அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு மேதகு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சீர்சால் பெருமக்களால் அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும் சிலைகளுக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது.

**சென்னையில் நடத்தப்பெறும் விழாக்கள் / நிகழ்ச்சிகள்**

| **வ. எண்** | **நாள்** | **விழாக்கள் / நிகழ்ச்சிகள்** |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |



| **வ. எண்** | **நாள்** | **விழாக்கள் / நிகழ்ச்சிகள்** |
|---|---|---|
| 9 | மே 5 | கற்புக்கரசி கண்ணகியின் நினைவைப் போற்றும் வகையில் சித்திரை முழு நிலவு நாள் |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>(i) தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்<br>(ii) தியாகி சங்கரலிங்கனார்<br>(iii) தியாகி செண்பகராமன் |
| 15 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் / நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| 16 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 17 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 18 | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 19 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 20 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 21 | நவம்பர் 8 | தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 22 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 23 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 24 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 25 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |



தென்னிந்திய முதல் பெண் இயக்குநரும், நடிகையுமான திருமதி. டி.பி.ராஜலெட்சுமி அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழக அரசின் சார்பில் அவரது நூற்றாண்டு விழா கொண்டாடவும், அன்னை தெரசா நூற்றாண்டு நிறைவு விழாவைத் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு 08.04.2012 அன்று அன்னை தெரசா நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. தென்னிந்திய முதல் பெண் இயக்குநரும், நடிகையுமான திருமதி. டி.பி.ராஜலெட்சுமி அவர்களின் நூற்றாண்டு விழா விரைவில் கொண்டாடப்பட உள்ளது.

## மாவட்டங்களில் நடத்தப்பெறும் விழாக்கள் / நிகழ்ச்சிகள்

| வ. எண் | நாள் | விழாக்கள் / நிகழ்ச்சிகள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்தநாள் விழா மாவட்டம் | இராமநாதபுரம் |
| 2 | மார்ச் 31 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் |
| 3 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கனார் பிறந்தநாள் விழா மாவட்டம் | கவர்ணகிரி, தூத்துக்குடி |
| 4 | மே 4 | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி தூத்துக்குடி மாவட்டம் |
| 5 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்தநாள் விழா | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 6 | ஜூலை 31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா | கன்னியாகுமரி மாவட்டம் |



| வ. எண் | நாள் | விழாக்கள் / நிகழ்ச்சிகள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 7 | ஆகஸ்ட் 2 மற்றும் 3 | வல்வில் ஓரி பிறந்தநாள் விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 8 | ஆகஸ்டு 2 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர் ஈரோடு மாவட்டம் |
| 9 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 10 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு மாவட்டம் |
| 11 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு மாவட்டம் |
| 12 | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 13 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் | பாப்பாரப்பட்டி தருமபுரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் / நிகழ்ச்சிகள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 14 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவுநாள் | சிவகங்கை திருப்பத்தூர் மாவட்டம் |
| 15 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா | பசும்பொன் இராமநாதபுரம் மாவட்டம் |
| 16 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் விழா | தொரப்பள்ளி கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 17 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா | எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டம் |



**“தற்போது உலகில் ஒரு நாட்டின் இடத்தை உண்மையில் தீர்மானிப்பது படைபலமோ அல்லது பொருளாதார வலிமையோ அல்ல. அதை அறிவாற்றல் தான் தீர்மானிக்கிறது. தகவல் தொழில்நுட்பம் என்பது மனிதனின் அறிவாற்றலுக்குச் சமமான ஒன்று. இதுதான் இந்தியாவை முதல் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

**விளம்பரம்**

அரசின் திட்டங்கள், சமூகநலப் பணிகள், கொள்கைகள், சாதனைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆகியவற்றை மக்கள் அறிந்துகொள்ளச் செய்யும் வகையில் நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் விளம்பரங்களை இத்துறை வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயலாற்றி வருகிறது. விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இந்திய வர்த்தக இதழிலும் (Indian Trade Journal) விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசியத் தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் வெளியிடப்படுவதுடன், www.tender.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை இலவசமாகப் பதிவிறக்கம் (Download) செய்துகொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதி படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000இன்படி அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன. மேலும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் தமிழ்நாடு அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றது. மாவட்ட அளவில்



வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் தலைமையிடத்தில் வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**“யார் போற்றினாலும், தூற்றினாலும் என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ் மக்களின் வளர்ச்சிதான் என்னுடைய வளர்ச்சி என்கின்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள், திரைப்பட மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

### திரைப்பட விருதுகள்

மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. விருதுகள் பெறுவதற்குத் தகுதியான சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காகத் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ. 2 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் இரண்டாம் பரிசு ரூ. 1 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் மூன்றாம் பரிசு ரூ. 75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் சிறப்புப் பரிசு ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.



பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூ. 1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

ஆண் மற்றும் பெண் குரல்வளக் கலைஞர்கள் (dubbing artists), சிறந்த குணசித்திர நடிகர், சிறந்த குணசித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்கான, திரைப்பட விருதுகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும் நடிப்பாலும் தனிமுத்திரை பதித்த அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்ஜிஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகின்றது.

**அரசு திரைப்பட மானியம்**

சிறிய முதலீட்டில் திரைப்படம் தயாரிப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான திரைப்படங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2007,2008, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்கான, திரைப்பட மானியம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சின்னத்திரை விருதுகள்**

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகிக்கும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் தொடர்கள், அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு ரூ.2 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூ.1 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், சிறந்த வாரத் தொடர் ஒன்றிற்கு ரூ.1 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும் சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த



ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணசித்திர நடிகர், சிறந்த குணசித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த குரல் வளக் கலைஞர் (ஆண் மற்றும் பெண்), சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்கு தலா 3 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்குத் தலா ரூ.1 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒன்பதாவது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.25 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டது.

**“சீர்மிகு திட்டங்கள் ஏற்றம் பெறவும், ஏழ்மை நிலை அகன்றிடவும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் மக்கள் நலத்திட்டங்களின் பயன்களை உரியவர் அனைவரும் பெற்றிட வேண்டும் என்பதே எனது பேரவா.”**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத்துறையின் 41 சங்கங்களைச் சேர்ந்த திரைப்படப் பணியாளர்கள் இந்தத் திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் உறுப்பினர்களாகச் சேரத் தகுதியுடையவர்கள். இதுவரை சுமார் 18,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

திரைப்படத்துறையினர் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | உறுப்பினர்கள் பயன் பெறும் நலத்திட்டங்கள் பற்றிய விவரம் | உதவித்தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதித் திட்டம் | |
| (அ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,00,000 |
| (ஆ) | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |



| வ. எண் | உறுப்பினர்கள் பயன் பெறும் நலத்திட்டங்கள் பற்றிய விவரம் | உதவித்தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ.15,000 |
| 3 | ஈமச் சடங்கு உதவி | ரூ.2,000 |
| 4 | கல்வி உதவித் தொகை | |
| | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | ஐ.டி.ஐ. அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| | முறையான பட்டப்படிப்பிற்கு<br>மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500<br>ரூ.1,750 |

| வ. எண் | உறுப்பினர்கள் பயன் பெறும் நலத்திட்டங்கள் பற்றிய விவரம் | உதவித்தொகை (ரூபாய்) |
|---|---|---|
| | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.2,000 |
| | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.2,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான மேற்படிப்பிற்கு | ரூ.3,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |
| | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.4,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டமேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| 5 | திருமண உதவித் தொகை | ரூ.2,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | ரூ.6,000 |
| 7 | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 8 | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 |
| 9 | முதியோர் ஓய்வூதியம் (மாதமொன்றுக்கு) | ரூ.400 |

கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திரைப்படத் துறையினரின் நலத் திட்டங்கள் மற்றும்



திரைப்படத்துறையினர் நலவாரிய செயல்பாடுகளுக்கான மொத்தம் ரூ.49,12,314/– (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து பனிரெண்டாயிரத்து முன்னூற்றுப் பதினான்கு மட்டும்) ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதில், திரைப்படச் சங்கங்கள் மூலம் பெறப்பட்ட 429 சங்க உறுப்பினர்களுக்கு மேற்கண்ட நலத்திட்ட உதவிகள் வேண்டி விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து ரூ.11,78,250/– (ரூபாய் பதினோரு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) வழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**"உங்கள் (மக்கள்) அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடித் தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன. சக்தி என்பது மக்கள் சக்தி தானே ? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், அணு சக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம்தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை."**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

### செய்திப்படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் முக்கியமான நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து அவற்றைத் தொகுத்து செய்தி மலராக வெளியிடும் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.



### வீடியோ செய்திமலர்கள்

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தன்னுடைய முக்கியப் பணியாக, தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வீடியோ செய்தி மலர்களைக் குறுந்தகடுகளில் தயாரித்து, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் அனுப்பி, பொதுமக்கள் கூடும் இடங்களில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வாகனங்கள் மூலமாக கள விளம்பரப் பணியைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலமாக இதுவரை 123 வீடியோ செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த ஓர் ஆண்டில் கீழ்க்காணும் 9 வீடியோ செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2011–2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வீடியோ செய்தி மலர்கள்

1 மலர்ந்தது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி

2 மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்

3 மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த ஆணைகள்

4 சுதந்திரத் திருநாள் 2011

5 எளியோர் ஏற்றம் பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கை

6 நாடு நலம் பெற நலத் திட்டங்கள்

7 தானே புயல் நிவாரணப் பணிகள்

8 பள்ளிக் கல்வியில் அம்மாவின் சொல்லி மாளாச் சாதனைகள்

9 மீனவர் நலன் காக்கும் மக்கள் அரசு

**திரைப்படப் படச்சுருள் செய்திமலர் (Film News Reel)**

வீடியோவில் படப்பிடிப்பு செய்தவற்றை 10 நிமிடப் படமாகத் தொகுத்து அவற்றை வீடியோவிலிருந்து 35 மி.மீ. திரைப்படப் படச்சுருளில் மாற்றம் செய்யப்படுகிறது. பின்னர் இந்தத் திரைப்படச் சுருள் செய்தி மலர் மத்திய அரசின் திரைப்படத் தணிக்கைக் குழுச் சான்றிதழ் பெற்று, 147 பிரதிகள் எடுக்கப்பட்டு மத்திய அரசு திரைப்படப்பிரிவின் சென்னை மற்றும் மதுரைக் கிளைகளின் மூலமாகத் தமிழகத்திலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் சுழற்சி முறையில் திரையிடப்படுகின்றது.



தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் இதுவரை **459** திரைப்படப் படச்சுருள் செய்தி மலர்கள்/கருத்து விளக்கப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஓர் ஆண்டில் 7 திரைப்படப் படச்சுருள் செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2011–2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப்படச்சுருள் செய்தி மலர்கள்**

1 மலர்ந்தது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி

2 மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்

3 மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த ஆணைகள்

4 சுதந்திரத் திருநாள் 2011

5 எளியோர் ஏற்றம் பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கை

6 நாடு நலம் பெற நலத் திட்டங்கள்

7 தானே புயல் நிவாரணப்பணிகள்

**தானே புயல் நிவாரணப் பணிகள் – செய்தி மலர்**

தானே புயல் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஒரு குறும்படம் தயாரிக்கப்பட்டு எல்லாத் திரையரங்களிலும், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வேன் மூலம், கிராமங்களிலும் பொதுமக்கள் அறியும் வகையில்

திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது. தானே புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்ச்சிகள், புயல் சேதங்களை, போர்க்கால அடிப்படையில் சீர் செய்யும் பணிகள் ஆகியவற்றைச் சிறப்புடன் விளக்கிக் காட்டிய இக்குறும்படம் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பும் பாராட்டும் பெற்றது.

**குறும்பாடல்கள் (Jingles)**

தமிழக அரசின் திட்டங்கள் குறித்து மக்கள் மனதை ஈர்த்து அவர்களது மனதில் ஆழப் பதியும் வண்ணம் 20 நொடிகள் கொண்ட மிகக் குறுகிய கால அளவிலான குறும்பாடல்களை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தயாரித்து வழங்குகிறது.

2011–2012ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பாதையில் மீண்டும் தமிழ்நாடு எனும் தலைப்பில் 11 குறும்பாடல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்குறும்பாடல்களில் இடம் பெற்றுள்ள அரசின் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு.

1 விலையில்லா அரிசி
2 முதியோர், மாற்றுத்திறனாளி, விதவை, ஆதரவற்றோர் உதவித்தொகை உயர்வு
3 பெண் அரசு ஊழியர் மகப்பேறு விடுப்பு 6 மாதமாக உயர்வு
4 மீனவர் மீன்பிடி தடைக்கால உதவித்தொகை



5 திருமண நிதியுதவியுடன் விலையில்லாமல் 4 கிராம் தங்கம்
6 படித்த பெண்களுக்கு விலையில்லாமல் 4 கிராம் தங்கம் மற்றும் ரூ.50 ஆயிரம்
7 விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி
8 விலையில்லா 4 ஆடுகள், கறவைமாடு திட்டம்
9 விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
10 மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி
11 சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு

**க்யூப் (Qube) டிஜிட்டல் தொழில்நுட்பம்**

முந்தையகாலங்கள் திரையரங்குகளில் கார்பன் குச்சி கொண்ட ஒளி வீழ்த்திகள் மூலம் 35 மி.மீ திரைப்படங்கள் திரையிடப்பட்டு வந்த நிலையை மாற்றி, விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக க்யூப் டிஜிட்டல் தொழில் நுட்பம் மூலம் கணினி வன்பொருள் வட்டு (Hard Disc) மற்றும் செயற்கைக் கோள் வழியாக தற்போது திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உள்ள மொத்த திரையரங்குகளில் 60 சதவீதத்திற்கும் மேலாக க்யூப் (Qube) டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ள திரையரங்குகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் 35மி.மீ திரைப்படச்சுருள் செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு வந்த காரணத்தால், இதுவரை க்யூப் (Qube)

டிஜிட்டல் தொழில் நுட்பம் கொண்ட திரையரங்குகளில் செய்தி மலர்களை திரையிட முடியாத நிலை இருந்து வந்தது. இதனை மாற்றி கடந்த பிப்ரவரி மாதம் முதல் ‘‘தானே புயல்’’ நிவாரணச் செய்திமலர் பற்றிய கருத்து விளக்கப் படத்திலிருந்து, க்யூப் (Qube) டிஜிட்டல் தொழில்நுட்பம் கொண்ட அனைத்து திரையரங்குகளிலும் வெளியிடப்படுவதற்கு ஏதுவாக வன்பொருள் வட்டாக (Hard Disc ) மாற்றி வழங்கப்படுகிறது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் 100 சதவீதம் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செய்தி மலர்கள் வெளியிடுவது உறுதி படுத்தப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழா நிகழ்ச்சிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் அனைத்து மக்களையும் சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.



**“பயிற்சிதான் மனிதனை பக்குவப்படுத்தும். எந்தத் துறையாக இருந்தாலும் அதில் பயிற்சி பெற்றால்தான் ஒருவர் தன்னுடைய பணியைத் திறமையாகவும் செம்மையாகவும் செய்ய இயலும்’’**

**– மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் திரைப்படம் தொடர்பான பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருவதாகும்.

இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி தரும் மூன்று முன்னணி நிறுவனங்களில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எம்ஜிஆர் அரசு

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் மற்ற இரண்டு நிறுவனங்கள் ஆகும்.



**பட்டயப் படிப்புகள்**

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லா பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது. எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்காணும் பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படத்தொகுப்பு மற்றும் படம் பதனிடுதல் ஆகிய பட்டயப் படிப்புகள் மூன்று ஆண்டுக் காலத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதலுக்கு ஏதாவது ஒரு பட்டப் படிப்பும், ஏனைய பட்டயப் படிப்புகளுக்கு மேல்நிலை வகுப்புத் தேர்ச்சியும் கல்வித் தகுதிகளாகும். ஒவ்வொரு பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். கல்விக் கட்டணமாக ரூ.10,000, சிறப்புக் கட்டணமாக ரூ.1,500, வளர்ச்சிக் கட்டணமாக ரூ1,000 வசூலிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரம் முன்னணி தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் வெளியிடப்பட்டு ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஜூலை மாதத்தில் மாணவர்களின் சேர்க்கை நடைபெறுகின்றது.

**மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி**

அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் தங்களது பட்டயப்படிப்பின் இறுதி ஆண்டில் 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப்படங்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் தமிழக அரசு ஆண்டு தோறும் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்புத் தயாரிப்புச் செலவிற்காக சுமார் ரூ.14 இலட்சம் நிதியுதவி அளித்து வருகிறது. இப்பட்டயக் குறும்படம் தயாரிக்கும் செலவினத்தை ஈடுசெய்ய ஒவ்வொரு குழுவிற்கும் அரசு ரூ.8,000 வழங்கி வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பட்டயக் குறும்படம் தயாரிக்க அரசு வழங்கும் இந்த தொகையை ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டவாறு அரசாணை வெளியிடப்பட்டு 2011-2012ஆம் நிதியாண்டு முதல், பட்டயக் குறும்பட தயாரிப்புச் செலவிற்காக ரூ.15,000/- வழங்கப்படுகிறது.

**குறும்பட விருது**

தமிழ்நாடு அரசு “எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது” என்ற பெயரில் இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர்,



சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்குத் தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம் மற்றும் ரூ.5,000/- ரொக்கம் மற்றும் நினைவுக் கேடயம் வழங்கி வருகிறது.

**திரைப்பட விழாக்களில் பங்கேற்க நிதியுதவி**

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்து கொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.75,000/- தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**குளிர்சாதன வசதியுடன் புதிய படப்பிடிப்புத்தளம்**



எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில், திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் சின்னத்திரை தயாரிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் பயிற்சி நிறுவன மாணவ மாணவியர், படப்பிடிப்புகளை நன்கு கவனித்து அதற்குப் பயன்படுத்தப்படும் நவீன கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்களை அறிந்து படப்பிடிப்பு குழுவினருடன் கலந்து உரையாடி அனுபவம் பெறும் வாய்ப்புக்காகவும் ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் புதுப்பிக்கப்பட்ட படப்பிடிப்புத் தளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 06.01.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

120 அடி நீளமும், 60 அடி அகலமும் கொண்ட இக்குளிரூட்டப்பட்ட படப்பிடிப்புத் தளம் சிறந்த ஒலி / ஒளி பதிவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்திலேயே அளவில் மிகப் பெரியதான இப்படப்பிடிப்புத்தளம், 2 சிறிய படப்பிடிப்புக் கூடங்கள், 3 ஆடை மாற்றும் அறைகள், தையல் கூடம் மற்றும் வாகன நிறுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பாகும். திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் சின்னத்திரை தயாரிப்பாளர்கள், அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணத்தின்படி இப்படப்பிடிப்புத் தளத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.



**“ஒரு மாநிலம் நிறைந்த பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், அங்கு மனித வள மேம்பாட்டிற்கு, குறிப்பாக அறிவுசார் மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.”**

**–மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில், கணிசமான வருமானத்தை அரசுக்கு ஈட்டக்கூடிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி போன்ற பல்வேறு மொழிப்படங்களும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. திரைப்படத் தொழில், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருவாயை ஈட்டித் தருகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது. மேலும், இத்தொழில், ஆயிரக்கணக்கான சினிமா கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை அளிக்கின்றது. திரைப்படத்துறையினை ஒழுங்குபடுத்தும்பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955–ஐ தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது.

இச்சட்டவிதிகளில், தனியருக்கு திரையரங்குகள் நடத்துவதற்கான உரிமம் மற்றும் திரைப்படங்கள் வெளியிடுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சட்ட விதிகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலராக செயல்படுகின்றனர். மேற்படி, சட்ட விதிகளின்படி, இணை ஆணையர், நில நிர்வாகத்துறை அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவை சீராய்வு மேற்கொள்ளும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது தவிர, திரையரங்குகளில் திரைப்படம் காண வருகின்ற பொது மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலைப்புத் தன்மை, முறையான பராமரிப்பு போன்றவற்றை தருகின்ற வகையில், 1957–ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழி வகைகள் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தம் 1056 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | வகைகள் | திரையரங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிரந்தரத் திரையரங்குகள் (பன்முக திரையரங்குகள் உட்பட) | 992 |



| வ. எண் | வகைகள் | திரையரங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2 | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 41 |
| 3 | நடமாடும் திரையரங்குகள் | 20 |
| 4 | திறந்த வெளித் திரையரங்குகள் | 03 |
| | **மொத்தம்** | **1056** |

**கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு**

1995ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது. 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (சட்டம் 36/2000)–ன்படி, மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள், உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல்துறை ஆணையாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 5, 6 மற்றும் 8 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு உரிய அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது. அதில், சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல்துறை ஆணையாளர்களும்,

மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களும் கேபிள் தொலைக்காட்சி சட்டத்தினை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுவோர் மற்றும் தவறு செய்வோர் மீது கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கக்கோரி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசு 09.01.2004ஆம் நாளிட்ட அதன் அறிவிக்கையின் மூலம், கேபிள் தொலைக்காட்சி சேவையை இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (TRAI) ஒப்படைத்துள்ளது.

## வீடியோ சட்டமும் விதிகளும்

1984—ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும், கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக்கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு



செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாக செயல்படுகின்றனர்.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின்கீழ், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு, குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்கிவருகிறது. பதிப்புரிமைச் சட்டம் / 2000ம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்க இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பன்னிரெண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. வீடியோ தடுப்பு பிரிவினால் 2004—ஆம் ஆண்டு முதல் 2011—ஆம் ஆண்டு வரை பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைதானவர்களின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

### திருட்டு வீடியோ தடுப்பு பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம்

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1151 | 1206 | 12,06,43,647/- | 53 |
| 2005 | 813 | 950 | 9,44,55,557/- | 13 |
| 2006 | 1153 | 1193 | 19,00,04,502/- | 10 |
| 2007 | 1844 | 1866 | 17,38,74,360/- | 9 |
| 2008 | 1968 | 1955 | 1,72,23,401/- | 17 |
| 2009 | 2204 | 2201 | 8,32,59,759/- | 31 |
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530/- | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745/- | 9 |



**“தமிழக மக்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தடையாக நிற்கும் எந்த இடையூறுகளையும் பொடிப் பொடியாக்கும் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எப்பொழுதும் உண்டு.”**

**—மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## தமிழரசு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், மக்கள் நலப்பணிகள், நலத்திட்ட உதவிகள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அச்சு ஊடகமாக தமிழரசு இதழ் திகழ்ந்து வருகிறது.

### அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் விளக்கும் இதழ்

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், தமிழகம் முழுவதிலும் உள்ள நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை

வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள், பொதுமக்களுக்குப் பயனளிக்கும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவை தமிழரசு இதழில் வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம், குடும்பநலம், மருத்துவம், ரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களையும் தாங்கி தமிழரசு இதழ் வெளியிடப்படுகிறது.

**சிறப்பு வெளியீடுகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், தலைவர்கள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், சிறு தொலைபேசிக் கையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள்



தொடர்புத்துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**100 நாள் சாதனை மலர்**

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்து “ மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைமலர்” என்ற சிறப்பு வெளியீடு உயர்ரகத் தாளில் அச்சிட்டு விலையில்லா வெளியீடாக விநியோகிக்கப்பட்டது.

**ஓராண்டு சாதனை மலர்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுறுவதையொட்டி, ஓராண்டு சாதனைகள் அடங்கிய சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது.

**தமிழரசு சந்தா**

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களுக்கான சந்தாக்களின் எண்ணிக்கை 63,775 ஆகும். இதில் 57,112 ஆயுள் சந்தாக்களாகும்.

**“ஏழை, எளிய மக்களுக்கு ஒரு புறம் சலுகைகளை வழங்குவதும் மறுபுறம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அவர்களே வாங்கிக் கொள்ளும் வகையில், அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் ஆகிய இரு வேறு நிலைகளில், பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.”**

**–மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## பொருட்காட்சிப் பிரிவு

### அரசுப் பொருட்காட்சிகள்

கேட்பதைவிட, பார்ப்பது மக்கள் மனதில் எளிதில் பதியும் என்பதால் செய்தி–மக்கள் தொடர்புத் துறை பொருட்காட்சிப் பிரிவின் மூலம் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளால் அரசின் அனைத்துத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை மக்கள் நேரடியாக எளிதில் அறிந்து கொள்ள இயலும் என்பதாலும், பொதுமக்கள் மாவட்டங்களில் நடைபெறும் பொருட்காட்சிக்கு குடும்பத்துடன் வருகை தந்து கண்டுகளித்துப் பயன்பெறவும், விழாக்காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மாவட்ட தலைநகரங்களில்



பொருட்காட்சிகளை நடத்தினால், பெரிதளவில் மக்கள் வருகை தந்து பயன்பெற்றிட ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காகவும் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும், இப்பொருட்காட்சிகளில் நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம் பெறும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சி ஆண்டுதோறும் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும், இரண்டாண்டுக்கு ஒரு முறை வேலூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் நடைபெற்று வந்தன. தற்போது வேலூர், திருநெல்வேலி,

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் அரசுப் பொருட்காட்சி நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு மேற்காணும் இடங்களில் பொருட்காட்சி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளியில் 12.01.2012 அன்று தொடங்கி 28.02.2012 வரை 45 நாட்கள் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டுள்ளது. திருச்சியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியின் மூலம் ரூ. 46.50 இலட்சம் வருவாயாக பெறப்பட்டுள்ளது. தற்பொழுது கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அரசு பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில் அரசு பொருட்காட்சிகளில் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பார்வையாளர்கள் விவரம் வரைப்படமாக கீழே விவரிக்கப்பட்டுள்ளது.



வருவாய் (ரூபாய் இலட்சங்களில்)



பார்வையாளர்கள் (இலட்சங்களில்)



சிறந்த முறையில் அரசுப் பொருட்காட்சிகளில் பங்குபெறும் அரசுத் துறைகளை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த அரசுத் துறை அரங்குகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை செய்தி–மக்கள் தொடர்புத் துறையால் 135 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அதன் மூலம் அரசுக்கு ரூ.26 கோடியே 8 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் வருவாய் பெறப்பட்டுள்ளது. தற்போது மதுரையில் நடைபெறுவது 137ஆவது அரசுப் பொருட்காட்சி ஆகும்.

**தனியார் பொருட்காட்சிகள்**

தனியாரால் வணிக நோக்குடன் வரைமுறைகளின்றி நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள் முறைப்படுத்தப்பட்டு, பொது மக்களின் நன்மைக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டு, மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**புதுடெல்லி மலர்ப்பேரணி**

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி



விழாவில் (Phool Walon Ki Saire) தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. மேலும் 2011 நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாவில் பங்கேற்று முதல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்**

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்து கொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும்.

சென்னையில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், அரசு சாதனைகளை விளக்கும் குறும்பாடல் ஒலிக்க, தேசிய மற்றும் தமிழகத்தின் மகத்தான தலைவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இருக்கும் தனிமுக்கியத்துவம் வாய்ந்த படங்களைத் தாங்கி வந்த செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி முதல் பரிசு பெற்றது,

**தொழில் மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி**

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று, அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள் குறித்த விளக்கங்களை பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையிலும், விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு அமைத்து பாராட்டுகளை பெற்றுவருகிறது.

**புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி**

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகிறது.

இப்பொருட்காட்சிகள் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்துவதுடன் அரசுக்கு வருவாய் கிடைக்கவும் வழி வகுக்கிறது.



**பல்துறை பணிவிளக்க முகாம்கள்**

அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், கொள்கை விளக்கங்களையும், பொது மக்களுக்கு விளக்கக்கூடிய வகையில், பல்துறை பணி விளக்க முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சி நடைபெறும் மாவட்டங்களை தவிர ஏனைய மாவட்டங்களில் பல்துறை பணிவிளக்க முகாம் நடத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.50 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் பல்துறை பணிவிளக்க முகாம்கள் சிறப்புடன் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. பல்துறை பணிவிளக்க முகாம்கள் நடைபெற்ற மாவட்டங்களில் 7,94,352 மக்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், கிராமங்களில் நடத்தப்படும் மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளின் போதும்

சிறிய அளவிலான பல்துறை பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள்**

தமிழக அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர்த்த 31 மாவட்டங்களில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை விளக்கும் வகையில் சிறு கண்காட்சியினை நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.38.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற் கட்டமாக 2011–2012 நிதி ஆண்டில் 31 மாவட்டங்களிலுள்ள 97 ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சிகளை மொத்தம் 4,02,100 மக்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். தொடர்ந்து வரும் ஆண்டுகளில் ஏனைய ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறு கண்காட்சிகள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**புகைப்படக் கண்காட்சிகள்**

மாவட்டங்கள் தோறும் திருவிழாக்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள்



பங்குகொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் ஆகியவற்றில் அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை ஆண்டுதோறும் மாவட்ட தலைநகரங்களில் நடத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு 2011–2012 நிதி ஆண்டில் மாவட்டத்திற்கு ரூ.10,000/– வீதம் நிதி ஒதுக்கீடு செய்து 24.02.2012 அன்று 30 மாவட்டங்களிலும் அதன் பிறகு திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இந்த புகைப்பட கண்காட்சிகளை மொத்தம் 2,74,400 மக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

**மாவட்டங்களில் திருவிழாக்களில் நடத்தப்படும் புகைப்படக்கண்காட்சிகள்**

| வ. எண் | திருவிழா | நடைபெறும் இடம், மாவட்டம் |
|---|---|---|
| 1 | கோடை விழா மலர்க் கண்காட்சி | ஏற்காடு, சேலம் |
| 2 | பழக்கண்காட்சி | குன்னூர், நீலகிரி |

| வ. எண் | திருவிழா | நடைபெறும் இடம், மாவட்டம் |
|---|---|---|
| 3 | சந்திர சூடேஸ்வரர் தேர்த்திருவிழா | ஓசூர் |
| 4 | மாங்கனி கண்காட்சி | கிருஷ்ணகிரி |
| 5 | வாவுபலி பொருட்காட்சி கன்னியாகுமரி | குழித்துறை, |
| 6 | கோடைவிழா | ஏலகிரி, வேலூர் |
| 7 | சாரல் விழா | குற்றாலம், திருநெல்வேலி |
| 8 | கோடைவிழா | திருவண்ணாமலை |
| 9 | கார்த்திகை தீபத்திருவிழா | திருவண்ணாமலை |
| 10 | சுந்தரமகாலிங்கம் கோவில் திருவிழா | சதுரகிரிமலை, மதுரை |
| 11 | வல்வில் ஓரிவிழா | கொல்லிமலை, நாமக்கல் |
| 12 | கோடைவிழா | கல்வராயன்மலை, விழுப்புரம் |
| 13 | புனித அன்னை ஆரோக்கிய மாதா திருவிழா | வேளாங்கன்னி, நாகப்பட்டினம் |
| 14 | அருள்மிகு சுப்பரமணியசுவாமி திருக்கோயில் ஆடிக் கிருத்திகை விழா | திருத்தணி, திருவள்ளூர் |
| 15 | பனிமய மாதா கோயில் திருவிழா | தூத்துக்குடி |
| 16 | குருநாத சுவாமி திருவிழா | அந்தியூர், ஈரோடு |



**“ஒரு மாநிலம் வளர்ச்சி பெற்றதற்கான அறிகுறி, அதன் மக்கள் வளமுடன் வாழ்வதே ஆகும். மக்கள் வாழ்வில் வளம்பெற மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி பெற வேண்டும். மக்களின் மனிதவள மேம்பாடு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்; மாநிலத்தின் சமூக மூலதனம் மேம்படுவது பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும்”**

**–மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

## மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும் அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொதுமக்களுக்கு, செய்தி இதழ்கள்,தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினை செம்மையுறச் செயல்படுத்துகின்றன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் ஒரு முக்கிய அங்கமாகும். அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறியும் வகையில்

விளம்பரம் செய்வதுடன் அரசு நலத்திட்டங்களின் பலனை பயனாளிகள் முழுமையாகப் பெற்றிடுவதற்கு ஏதுவாக அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கும் பணியினையும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல், மக்கள் கூடுமிடங்களில் வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிக்கையாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகிறார்கள். மக்கள் தொடர்பு பணிகளை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் நவீன தகவல் தொடர்பு சாதனங்களால் மேம்படுத்தப்பட்டு ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு வருகின்றன.



**புதிய வாகனங்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 3.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு 2 கோடியே 29 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 16 பொலிரோ ஜீப்புகள், 17 டெம்போ டிராவலர் வீடியோ வேன் மற்றும் 1 டோயோட்டா இன்னோவா வாகனம் ஆகிய 34 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.



## செய்தி நிலையங்கள்

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்செய்தி நிலையங்களில் வரலாறு, அறிவியல், மொழியியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள் மற்றும் நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

இச்செய்தி நிலையங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள்.

### மாநிலச் செய்தி நிலையம், சென்னை

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இயங்கி வந்த மாநிலச் செய்தி நிலையம், தற்போது சென்னை திருவல்லிக்கேணி, பாரதியார் இல்லத்தில் செயல்பட்டு வருகிறது. மாநிலச் செய்தி நிலையத்தில் நூலகமும் படிப்பகமும் செயல்பட்டு வருகின்றன.



இந்நூலகத்தில், தலைவர்களின் வரலாற்று நூல்கள், குழந்தைகள் நூல்கள், அறிவியல் நூல்கள், அரசியல் நூல்கள் மற்றும் பல்வேறு தலைப்புகளிலான அரிய நூல்கள் உள்ளன. இது தவிர சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை இங்கு மேற்கோள் பணிக்காக வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள படிப்பகத்தில் தமிழ், ஆங்கில நாளேடுகள், வார, மாத மற்றும் பருவ இதழ்கள் வாங்கப்பட்டு பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு நாள்தோறும் ஏராளமானோர் வருகைதந்து படித்துப் பயன்பெறுகிறார்கள்.

இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள பருவ இதழ்கள், மற்றும் நாளேடுகளில் இருந்து செய்திகள் அரசின் மேற்கோள் பணிக்காகத் தேவைப்படும்பொழுது வழங்கப்படுகிறது. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை நடத்தும் அரசு விழாக்களுக்குத் தேவையான குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசின் உயர் அலுவலர்கள் ஆகியோருக்கு மேற்கோளுக்காகவும் தரப்படுகின்றது. தமிழரசு இதழுக்குக் குறிப்பு எடுத்துக் கொள்ளத் தேவையான நூல்களும் தகவல்களும் மாநிலச் செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

**புத்தகப்பதிவு**

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், 1867 ஆம் ஆண்டு பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டப்படி புத்தகப் பதிவாளராகவும் செயல்படுவதால், ஆண்டுதோறும் வெளியிடப்படும் புத்தகங்களில் இரண்டு படிகள் பெறப்பட்டு, முறையாகப் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.



**நிறைவுரை**

**“ஒன்றுபட்டு நிற்போம்! ஓயாது உழைப்போம்! எந்த நிலையிலும், எந்த வகையிலும், தமிழ்நாட்டின் உரிமைகளை ஒருபோதும் விட்டுத் தரமாட்டோம்! உறுதி கொண்ட உள்ளத்துடன் பொற்காலத் தமிழகத்தை புதிதாய் மீண்டும் படைப்போம்!”**

என்பது **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக அளித்துள்ள சூளுரையாகும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் விடுத்துள்ள இந்த சூளுரையை இதயத்தில் ஏந்தி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களையும் தமிழக அரசின் சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற மாபெரும் கடமையை செய்தி மக்கள் தொடர்புத்துறை உளப்பூர்வமாகவும் ஊக்கத்தோடும் உத்வேகத்தோடும் செயல்படுத்தும்.

**“அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூது**
**உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று “**

என்னும் திருவள்ளுவரின் திருவாக்கின்படி அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய இன்றியமையாப் பண்புகளுடன் சொல்ல வேண்டியவற்றை சுருக்கமாக சொல்லி, விரும்பாத சொற்களை விலக்கி, கேட்போர் மனம் மகிழும் வண்ணம் எடுத்துக்கூறி நன்மை உண்டாக்குகிற தூதுவனாக, அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் மக்களுக்கு கொண்டு செல்லும் இணைப்பு பாலமாக செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து செயலாற்றும்.

**கே.டி. ராஜேந்திரபாலாஜி**
**செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள்**
**செயலாக்கத்துறை அமைச்சர்**



**இணைப்பு–1**

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013**

**நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்**

| | | 2010–2011 கணக்குகள் | 2011–2012 வரவு செலவுத் | 2011–2012 திருத்த மதிப்பீடு திட்ட மதிப்பீடு | 2012–2013 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 86,34 | 72,43 | 1,17,43 | 75,00 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 43,04,72 | 43,86,62 | 50,23,97 | 46,32,48 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 15,26 | 52,20 | 50,40 | 63,00 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 8,08 | 8,35 | 7,98 | 8,73 |
| | **மொத்தம்** | **44,14,40** | **45,19,60** | **51,99,78** | **47,79,21** |